DEPOSITION OF WITNESS
IN THE I ADDITIONAL DISTRICT COURT (PCR),
TIRUCHIRAPPALLI.
**Spl.S.C.No.3/2025**
**P.W.11**

| | | |
|---|---|---|
| Name | : | திரு.சண்முகராஜா |
| Father's Name | : | திரு.தங்கராசு |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | 49 |

(Accused is present)

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 19th day of January 2026.

**முதல் விசாரணை**

நான் தற்போது அயினாபட்டிகாலனியில் வசித்து வருகிறேன். கூலி வேலை செய்கிறேன். அ.சா.7 மகாமுனியை தெரியும். கடந்த 04.10.2024ம் தேதி இரவு சுமார் 7.00 மணியளவில் நானும், மகாமுனி என்பவரும் தொட்டியம் ஊராட்சி ஒன்றிய அலுவலகம் முன்பு நின்று பேசிக்கொண்டு இருந்தபோது முசிறி உட்கோட்ட காவல் துணை கண்காணிப்பாளர் தொட்டியம் ஊராட்சி ஒன்றிய தலைவர் அறையை பார்வையிட்டு மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகஜர் தயாரித்தார். அதில் நானும், மகாமுனியும் கையொப்பம் செய்தோம். அந்த பார்வை மகஜர் ஏற்கனவே அ.த.சா.ஆ.2 ஆக குறியிடப்பட்டுள்ளது. அதே அலுவலகத்தில் அன்று 7.10 மணியளவில் பேப்பர் வெயிட் ஒன்றை முசிறி உட்கோட்ட காவல் துணை கண்காணிப்பாளர் கைப்பற்றுதல் மகஜர் தயாரித்து கைப்பற்றினார். அந்த கைப்பற்றுதல் மகஜரில் நானும், மகாமுனியும் கையொப்பம் செய்தோம். அந்த கைப்பற்றுதல் மகஜர் ஏற்கனவே அ.த.சா.ஆ.3 ஆக குறியிடப்பட்டுள்ளது. இந்த வழக்கு தொடர்பாக காவல் துணை கண்காணிப்பாளர் என்னை விசாரித்தார்.

**குறுக்கு விசாரணை**

எனது ஊரான அயினாப்பட்டிக்கும், தொட்டியம் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்திற்கும் இடைப்பட்ட தூரம் சுமார் 4 கி.மீ. ஆகும். அ.சா.7 மகாமுனி எனது நண்பர் ஆவார். அ.சா.1 கிருஷ்ணவேணி மற்றும் நானும்

ஒரே கட்சியை சேர்ந்தவர்கள் ஆவோம். அ.சா.1 கிருஷ்ணவேணிக்கும் எனக்கும் நல்ல அறிமுகம் உண்டு. கடந்த 04.10.2024ம் தேதி இரவு சுமார் 7.00 மணியளவில் நானும், மகாமுனி என்பவரும் என்ன காரணத்திற்காக தொட்டியம் ஊராட்சி ஒன்றிய அலுவலகம் முன்பு நின்று பேசிக்கொண்டு இருந்தோம் என்று காவல் துணைகண்காணிப்பாளரிடம் சொல்லவில்லை என்றால் சரியல்ல. ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் அதிகமாக பணிபுரியும் ஆட்களும், வெளி ஆட்களும் வருவார்கள் என்றால் சரிதான். அங்கு பணிபுரியும் நபர்களையும், இருந்த நபர்களையும் விசாரணை அதிகாரி சாட்சியாக அழைத்தாரா என்று எனக்கு தெரியாது. நான் உள்ளே செல்வதற்கு முன்பே காவல் துணை கண்காணிப்பாளர் அந்த டேபிள் வெயிட்டை கைப்பற்றிவிட்டார். ஊராட்சி ஒன்றிய தலைவர் அறையை மட்டும் தான் வரைபடம் வரைந்தார்கள். அந்த அறை எப்படி அமைந்துள்ளது என்றும், அதில் எத்தனை இருக்கைகள் உள்ளது என்ற விவரங்கள் எனக்கு தெரியாது. நானும், அ.சா.1 கிருஷ்ணவேணியும் ஒரே கட்சியை சேர்ந்தவர்கள் என்றும், என் முன்னிலையில் பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயாரிக்கப்படவில்லை என்றும், என் முன்னிலையில் கைப்பற்றுதல் மகஜர் தயாரித்து சொத்து எதுவும் கைப்பற்றபடவில்லை என்றால் சரியல்ல. அ.சா.1 கிருஷ்ணவேணியும், போலிசாரும் கேட்டுக்கொண்டதற்கிணங்க உண்மைக்கு மாறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நானும், மகாமுனியும் கையொப்பம் செய்ததாக சொல்லப்படும் அ.சா.ஆ.2 பார்வை மகஜர் மற்றும் அ.சா.ஆ.3 கைப்பற்றுதல் மகஜர் வழக்கிற்காக பின்னிட்டு காவல் நிலையத்தில் உருவாக்கப்பட்டவை என்றும், காவல் நிலையத்தில் வைத்து கையொப்பம் செய்தால் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u> – இல்லை.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி மற்றும் அவரது வழக்கறிஞர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம் என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு, சாட்சியிடம் படித்து காட்டப்பட்டு விளக்கிக் கூறப்பட்டு சாட்சியால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு கைரேகை/கையொப்பம் செய்யப்பட்டது.

(ஓம்.).XXXXX,
முதலாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,
திருச்சிராப்பள்ளி.

Kgaoo

DEPOSITION OF WITNESS
IN THE I ADDITIONAL DISTRICT COURT (PCR),
TIRUCHIRAPPALLI.
**Spl.S.C.No.3/2025**
P.W.12

| | | |
|---|---|---|
| Name | : | திருமதி.ராஜேஸ்வரி |
| Husband's Name | : | திரு.கனகசக்தி |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | 41 |

(Accused is present)

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 19th day of January 2026.

**<u>முதல் விசாரணை</u>**

நான் தற்போது திருச்சி மாவட்டம், முசிறி போக்குவரத்து காவல் நிலையத்தில் பெண் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். அயல்பணியாக முசிறி காவல் துணை கண்காணிப்பாளர் அலுவலகத்தில் பணிபுரிந்து வருகிறேன். கடந்த 11.12.2024ம் தேதி நான் முசிறி காவல் துணை கண்காணிப்பாளர் உத்தரவின் பேரில் தொட்டியம் காவல் நிலைய குற்ற எண்.257/2024 வழக்கின் விசாரணைக்காக சம்பந்தப்பட்ட JIO Reliance Infocomm limited சென்னை அலுவலகம் சென்று Nodal Officer அவர்களிடம் பிரிவு 63(4)(c) BSA-ன் கீழ் சான்று பெற்று 13.12.2024 அன்று முசிறி காவல் துணை கண்காணிப்பாளரிடம் ஒப்படைத்தேன். அவர் என்னை விசாரித்தார்.

**<u>குறுக்கு விசாரணை</u>**

எனக்கு தனியாக நாட்குறிப்பு உண்டு. அதில் அன்றாட பணி விவரத்தை குறிப்பிடவேண்டும் என்றால் சரிதான். விசாரணையின்போது புலன்விசாரணை அதிகாரியிடம் காண்பிக்க வேண்டும் என்றால் சரிதான். என்னுடைய மேலே கண்ட பணிகள் செய்தது தொடர்பான விபரங்களை நாட்குறிப்பில் எழுதி புலன்விசாரணை அதிகாரியிடம் இந்த வழக்கு

Preview

விசாரணையின்போது ஒப்படைத்தேனா என்றால் நான் எழுதியிருக்கிறேன். புலன்விசாரணை அதிகாரி அதை கேட்காததால் நான் ஒப்படைக்கவில்லை. நான் சென்னை செல்லவில்லை என்றும், சான்று விவரங்களை நான் பெறவில்லை என்றும், நான் நாட்குறிப்பில் எழுதவில்லை என்றும், அதனால் தான் விசாரணை அதிகாரியிடம் ஒப்படைக்கவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. அந்த சான்று வழங்கிய அதிகாரியின் பெயர் கைலாசம் ஆகும். நான் கடவுச்சீட்டை புலன்விசாரணை அதிகாரியிடம் ஒப்படைக்கவில்லை என்றால் சரியல்ல. நான் ஒப்படைத்தேன். புலன்விசாரணை அதிகாரி கேட்டுக்கொண்டதற்கிணங்க நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றும், நான் எந்த சான்றும் பெறவில்லை என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u> – இல்லை.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி மற்றும் அவரது வழக்கறிஞர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம் என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு, சாட்சியிடம் படித்து காட்டப்பட்டு விளக்கிக் கூறப்பட்டு சாட்சியால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு கைரேகை/கையொப்பம் செய்யப்பட்டது.

(ஒம்.).XXXXX,
முதலாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,
திருச்சிராப்பள்ளி.

DEPOSITION OF WITNESS
IN THE I ADDITIONAL DISTRICT COURT (PCR),
TIRUCHIRAPPALLI.
Spl.S.C.No.3/2025
P.W.13

| | | |
|---|---|---|
| Name | : | திரு.பாலு |
| Father's Name | : | திரு.தங்கதுரை |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | 34 |

(Accused is present)

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 19th day of January 2026.

**<u>முதல் விசாரணை</u>**

நான் தற்போது முசிறி காவல் நிலையத்தில் முதல் நிலை காவராக பணியில் இருக்கிறேன். இதற்கு முன்பு தொட்டியம் காவல் நிலையத்தில் பணியில் இருந்தபோது கடந்த 08.10.2024ம் தேதி முசிறி உட்கோட்ட காவல் துணை கண்காணிப்பாளர் உத்தரவின்பேரில் தேவராஜ் என்ற நபருடைய 9042199991 என்ற செல்போன் எண்ணுக்கு உரிய அழைப்பு விவரங்களை கேட்டு வேண்டுகோள் கொடுத்தேன். அதன்பின்னர் 19.10.2024ம் தேதி தொட்டியம் காவல் நிலைய மின் அஞ்சல் முகவரிக்கு வந்த அழைப்பு விவரங்களை தொட்டியம் காவல் நிலைய கணினியிலிருந்து பதிவிறக்கம் செய்து கொடுத்தேன். மேலும் காவல் துணை கண்காணிப்பாளர் செல்போனில் இருந்து சாட்சி சீத்தா என்பவர் பற்றி வந்த தகவலை பதிவிறக்கம் செய்து கொடுத்தேன். வழக்கு தொடர்பாக முசிறி உட்கோட்ட காவல் துணை கண்காணிப்பாளர் என்னை விசாரித்தார்.

**<u>குறுக்கு விசாரணை</u>**

நான் பதிவிறக்கம் செய்ததாக கூறும் அழைப்பு விவரங்கள் சைபர் கிரைம் போலிசார் மூலமாகத்தான் பெறப்பட்டது என்றால் சரிதான்.

08.10.2024 அன்று அழைப்பு விவரங்கள் கேட்டு வேண்டுகோள் கொடுத்ததாக முசிறி உட்கோட்ட காவல் துணை கண்காணிப்பாளர் என்னை விசாரித்தபோது சொல்லவில்லை. சம்பவ காலத்தில் கணினியை இயக்குவதற்கு என பிரத்தியேகமாக தொட்டியம் காவல் நிலையத்தில் காவலர் யாரும் இல்லை. கணினியை இயக்கத் தெரிந்த காவலர்கள் அந்த பணியில் ஈடுபடுவார்கள். அது ஒரே ஒரு காவலரால் மட்டும் செய்யப்படம் பணி கிடையாது. எந்த கணினியில் இருந்து எடுக்கப்பட்டது என்பதையும், ஹார்டு டிஸ்க் விவரங்களையும், பிரிண்டர் விவரங்களையும் காவல் துணை கண்காணிப்பாளர் விசாரிக்கும்போது சொல்லவில்லை. காவல் துணை கண்காணிப்பாளர் கேட்டுக்கொண்டதற்கிணங்க உண்மைக்கு மாறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் எந்த பணியும் செய்யவில்லை என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u> – இல்லை.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி மற்றும் அவரது வழக்கறிஞர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம் என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு, சாட்சியிடம் படித்து காட்டப்பட்டு விளக்கிக் கூறப்பட்டு சாட்சியால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு கைரேகை/கையொப்பம் செய்யப்பட்டது.

(ஒம்.).XXXXX,
முதலாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,
திருச்சிராப்பள்ளி.